1981 பிப்ரவரி 28]

நடவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பகுதியில் முட்புதர்களும் மேடுபள்ளங்களும் உள்ளன. நிலம் சமன் செய்து சீர்திருத்தம் செய்யலாம் எனக் கருதினால், மேல் மண் நீங்கிய பிறகு போதுமான மண் கிடைக்காது. விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் வசதியுமில்லை. மணல் பாங்கான நிலமாக இருப்பதால் லாபகரமாகச் சாகுபடி செய்ய இயலாது. மேலும், இப்பகுதி வத்திராயிருப்பிலிருந்து சுமார் 10 மைல் தொலைவிலுள்ள காடாக இருப்பதால், விதைகள், உரம் மற்றும் விவசாயக் கருவிகள் முதலியவைகளைக் கொண்டு செல்வதற்குப் போதிய சாலை வசதியில்லை. பணிபுரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதி இல்லை. 10 மைல் தொலைவிலிருந்து அலுவலர்கள் சென்று வருவது என்றால் பொருள்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காது. மேலும், கூலியாட்கள் கிடைப்பது மிகவும் அரிது. 10 மைல் சென்று கூலியாட்கள் வேலை செய்தால் வேலைத் திறன் மிகவும் பாதிக்கும். எனவே, இப்பகுதியில் பண்ணை அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் போன்ற பகுதிகளில் விதைப் பண்ணைகள் வைப்பதற்கு 40 ஏக்கர் கொடிக்கால் பயிரிடுவதற்கு வசதி செய்யப்பட்டும், அங்கே பயிரிடப்படாமல் இருக்கின்றது. ஆகவே, இதை மேலும் நல்லமுறையில் பரிசீலித்து, அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து, இதைப்பற்றி பரிசீலனை செய்து, அதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்களே நேரிடையாக வர முடியாது; அடுத்த கேள்வி.

அம்பாசமுத்திரம் தொகுதி அப்பர் டாமிலிருந்து கேரளாவிற்கு மலைச் சாலை.

*வினா எண். 311— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள அப்பர் டாமிலிருந்து கேரளாவிற்கு மலைச்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்யும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் இது ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்யப்பட்டு ஆறு வருடங்கள் ஆகி அது கிடப்பில் இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அப்பர் டாமிலிருந்து கேரளாவிற்கு செல்லும் பாதையை செப்பனிட்டால் இருபத்தைந்து கிலோ மீட்டர் தான் வரும். நாகர்கோவில் வழியாகவோ அல்லது செங்கோட்டை மூலமாகவோ செல்வதென்றால் 120 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரம் செல்லவேண்டியிருக்கிறது. எனவே, போக்குவரத்தைத் துரிதப்படுத்துவதற்காக இந்த திட்டத்தை அரசு மீண்டும் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அப்பர் டாமிலிருந்து கேரளா வரைக்கும் 12 கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது. ஆனால் இதற்கு வனப் பாதையின் மூலமாகத் தான் செல்ல வேண்டும். இதற்காக ஆய்வு செய்யப்பட்டபோது நாற்பது இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டது. பணம் குறைவாக இருக்கிறதென்பதால் சீரான நேரத்தில் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்பெறும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, நான் சொன்ன தூரத்தை விட குறைவாகவே சொல்லிவிட்டார்கள். குறைவாக உள்ள தூரத்தில் இன்னும் சொல்லப் போனால் 120 கிலோமீட்டரைவிட இந்த 12 கிலோ மீட்டர் தூரம் எவ்வளவு எளிதானது. போக்குவரத்துக்கு வசதியாகவும், அண்டை மாநிலத்தோடு அதிக தொடர்பு கொள்ளவும் இது மிகவும் உதவிகரமாக இருக்கும். பணத்தை பிரதானமாக கொள்ளாமல் மீண்டும் இந்த திட்டத்தை பரிசீலனை செய்து வழிவகை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நிதிநிலைக்கு ஏற்ப தான் சில திட்டங்களை செயல்படுத்த முடியும். அதனால்தான் நிதி நிலை சீரான பிறகு எடுத்துக்கொள்ளப் பெறும் என்று ஏற்கனெவே பதில் சொன்னேன்.

வெட்டாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 312—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு ஒன்றியம், பெரியகுத்தகை—கோவில் பத்து சாலையில் வெட்டாற்றில் 55 எண் துறையில், நாலுவேத பதியில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் எவை?